**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., L.L.M.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01ஆம் நாள் திங்கட்கிழமை

**IA.No.05/2025 in IA.No.2/2023 in OS.No.329/2018**

**(TNTM03000600/2018)**

1. வள்ளியம்மாள் மற்றும் 3 நபர்கள் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. பச்சையம்மாள் மற்றும் இருவர் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிராக/

1.பச்சையம்மாள் மற்றும் மூவர் ... எதிர்மனுதாரர்கள்/ உத்தேசதரப்பினர்கள்

இம்மனு என் முன்பாக 13.11.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.K.ராஜமூர்த்தி,B.A.,B.L., மற்றும் திருமதி.R,ஷோபனா, B.Sc.,L.L.B., ஆகியோர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.சரவணன்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இம்மனுவில் கண்டுள்ளவாறு I.A.No.2/2023 மனு அபிடவிட்டில் Short Cause Title–ல் 1ம் பிரதிவாதி வள்ளியம்மாள் (Died) என்று திருத்தம் செய்ய உத்தரவு பிறப்பிக்க கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு கனம் கோர்ட்டார் அவர்களால் மறுதிருப்பம் செய்ய 30 நாட்கள் கால அவகாசம் அளித்து 13.10.2022 அன்று திருப்பம் செய்யப்பட்ட Under Order 22 Rule 4 C.P.C மனுவானது மனுதாரர் அலுவலகத்தில் பிற கோப்புகளுடன் கலந்துவிட்ட காரணத்தால் குறித்த காலத்தில்

மறுதிருப்பம் செய்ய முடியாமல், மேற்படி மனுவை மறுதிருப்பம் செய்வதில் 309 நாட்கள் காலதாமதமாகி விட்டதை மன்னித்து ஏற்க உத்தரவிடக் கோரிய மனு under Section 151 C.P.C. மனு கனம் கோர்ட்டார் அவர்களால் I.A.No.2/2023 என நெம்பராகி விசாரணை நிலுவையில் உள்ள பட்சத்தில், மேற்படி மனுவில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியான வள்ளியம்மாள் என்பவர் 13.04.2022 அன்று காலமாகிவிட்டார். மேற்படி நபரின் வாரிசுதாரர்கள் மேற்படி மனுவில் கண்டுள்ள 1 முதல் 3 வாதிகளாகவும் மற்றும் 3ம் பிரதிவாதி மற்றும் 1 முதல் 3 உத்தேசதரப்பினர் ஆவார்கள். மேற்படி அனைவரும் இம்மனுவில் உள்ள காரணத்தால், மேற்படி மனுவில் 1ம் பிரதிவாதி வள்ளியம்மாள் (Died) என்று இம்மனுவில் கண்டுள்ளவாறு Short Cause Title–ல் மனு மற்றும் அபிடவிட்டில் திருத்தம் செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. இதை மனுதாரர் வேண்டுமென்றே கூறவில்லை என்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>3 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>**

மனுதாரர் தாவாவில் தாக்கல் செய்துள்ள மனுவானது இந்த தாவாவை பொறுத்தவரை ஏற்ககூடியது அல்ல. 1ம் எதிர்மனுதாரர் இந்த பதிலுரையில் ஒப்புக்கொள்ளும் சங்கதிகள் தவிர இதர சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டியது. மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கின்ற மனுவில் சொல்லபட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உரிய முறையில், உரிய நேரத்தில் தாவாவிற்கு தேவைப்படும் நிலையில் தாக்கல் செய்யபடாமல் மனுதாரர்களின் விருப்பத்திற்கு ஏற்ப தாவாவினை காலதாமதப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்திலும், தாவாவின் விசாரணையின் தன்மையையும், தாவாவில் கோரியுள்ள பரிகாரங்களை மீறும் வண்ணமும் மனுதாரர்களின் தேவைக்கு ஏற்றவாறு இவ்வழக்கில் மேற்கண்ட Steps ஆனது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் இத்தாவாவில் தாக்கல் செய்துள்ள Steps–கள் அனைத்தும் காலதாமதமாகவும், உண்மைக்கு புறம்பான தன்மைகளை கொண்டும் நீதிமன்ற விசாரணையினை மாற்றும் வண்ணமும், தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அவை ஏற்க்ககூடியது அல்ல. அவற்றை மனுதாரர்களே நிரூபிக்கவேண்டும். மனுவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள Section 5 Limitation Act–ன் படியான மனு தேவையற்றது ஏற்க்ககூடியது அல்ல. அதேபோல Section Order 22 Rule 4–ன் படியான மனு தேவையற்றது ஏற்க்ககூடியது அல்ல. அதேபோல் Abatement மனுவும் காலதாமதமாகவும் உரிய சங்கதிகள் இன்றியும் உண்மைக்கு புறம்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள I.A.5/2025. I.A.6/2025, I.A.4/2025 மனுக்களை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

4. **<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கில் மனுதாரர்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த மனுவானது திருப்பப்பட்டது 30 நாட்களுக்குள் திரும்பிய மனுவை மீண்டும் தாக்கல் செய்திருக்கவேண்டும். அவ்வாறு மீண்டும் தாக்கல் செய்ய ஏற்பட்ட 309 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கவேண்டி இ.ம.எண்.2/2023 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனு நிலுவையில் இருக்கும்போது 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி வள்ளியம்மாள் இறந்துவிட்டார். அவரின் வாரிசுதாரர்கள் அசல் வழக்கில் 1 முதல் 3 வாதிகளாகவும் மற்றும் 3ம் பிரதிவாதி மற்றும் 1 முதல் 3 உத்தேச தரப்பினர்கள் ஆவார்கள். இறந்துபோன வள்ளியம்மாளின் வாரிசுகள் அனைவரும் இம்மனுவில் தரப்பினராக உள்ளார்கள். இ.ம.எண்.2/2023 குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பில் வள்ளியம்மாள் பெயருக்கு அடுத்து இறந்தார் என்று திருத்தம் செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. 3ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையை, 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். அசல் வழக்கினை காலதாமதம் படுத்தவேண்டி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். அசல் வழக்கில் steps தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுக்களான Sec 5 Limitation Act ன்படியான மனு, order 22 Rule 4 ஆகிய மனுக்கள் தேவையற்ற ஒன்றாகும். இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும்.

6. இம்மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு இறந்துபோன 1ம் பிரதிவாதி வள்ளியம்மாளின் வாரிசுகள் ஏற்கனவே இடை மனுக்களில் தரப்பினராக உள்ளார்கள். இ.ம.எண்.1/2023ல் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பில் 1ம் பிரதிவாதி வள்ளியம்மாள் பெயருக்கு அடுத்து இறந்தார் என்று திருத்தம் செய்தால்தான் இ.ம.எண்.2/2023ஐ மேல் நடத்தி தீர்வு காணமுடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 01ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.12.01 17:34:12 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:–</u> இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2025.12.01 17:34:19 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.